REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில்:10 சதம் ★ PHONE: 85680

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 11உ வெள்ளி (26—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 12உ சனி (27—7—57) [இதழ் 35

டுனீஷியக் குடியரசு பிரகடனம்

20 ஆண்டுக்கால முடியாட்சி ஒழிகிறது

டூனிஸ், ஜூலை 25—

250 ஆண்டுக் காலமாக நிலவிவந்த முடியாட்சிக்கு, டூனீஷிய அரசியல் நிர்ணய சபை முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

டூனீஷியாவை ஒரு குடியரசு என்று பிரகடனப்படுத்துமுன் அந்தச் சபை முடியாட்சியை ஒழிப்பது என்று ஒருமனதாகத் தீர்மானித்தது.

இப்போதைய பிரதமரான ஹபீப் பர்கூபா முதல் குடி

(4-ம் பக்கம் பார்க்க)

பட்டும் முத்தும் ஏற்றுமதி செய்த பண்டைத் தமிழகம்

இன்று கூலிகளைத்தானே அனுப்புகிறது?

தென்னாட்டைத் தாழ்த்திவிட்டு தூய்மையான வாதங்களா?

சென்னை சட்டசபையில் அண்ணா அறைகூவல்

★

"தெற்குப் பகுதியைத் தாழ்த்திவிட்டு எத்தனை பெரிய தூய்மையான வாதங்களை எந்தப் பெரிய தலைவர்கள் சொன்னாலும் அதை ஒத்துக் கொள்வதற்கில்லை. தென்னாட்டில் இருக்கின்ற குறைகளை நீக்கினால் ஒழிய, தென்னாடு முன்னேற்றம் அடையாது. இதை மறுத்து, எந்த விதமான அரசியல் வாதங்களைக் கூறினாலும் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை.

"திட்டங்களைப் பற்றி என்ன சொன்னாலும்கூட, கடைசியில் நான் என்னுடைய அதிருப்தியை கூறிக்கொள்ளாமல் இருப்பதற்கில்லை; அது யாருடையபேரிலும் இல்லை—எந்தக் கட்சியின்பேரிலும் இல்லை; காலத்தின்பேரில்தான் என்னுடைய அதிருப்தியாகும்; அது, 'ஒரு காலத்தில் பட்டையும் முத்தையும் வெளிநாடுகளுக்கெல்லாம் அனுப்பிவந்த தமிழ்நாடு, இன்றையத்தினம், கூலிகளைத் தான் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறது' என்றெண்ணி, அதற்காகக் காலத்தைத்தான் நான் நொந்துகொள்கிறேன். ஆற்றலும், அறிவும், திறமையும் படைத்த அமைச்சர்கள் எங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தும் டில்லியரால் போதுமான அளவு அதிகாரம் அளிக்கப் படாததால் அவர்கள் செயல்பட முடியாமல் இருக்கிறார்கள்; வெளி நாடுகளில் கூலிகளை இப்பொழுது எடுத்துக்கொள்வதில்லை; இங்கிருந்து சிலோனுக்குச் சென்றவர்களை அவர்கள் துரத்துகிறார்கள்.

"பொருளாதாரத்தை நாம் சரிவர உணர்ந்து, பேராசிரியர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு, தொழில்துறையில் நல்லபடி முன்னேற்றம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நம் நாட்டில் வறுமை சொல்லக்கூடிய நிலையில் இல்லை; அந்த அளவிற்கு வறுமை இருக்கிற காரணத்தால் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, அண்ணா அவர்கள் சென்னை சட்டசபையில், தொழில் மானியத்தின் மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"சட்டமன்றத் தலைவர் அவர்களே! தொழில் துறையில் ஒதுக்கப்பட்டிருக்கிற மானியத்தின் மீது தரப்பட்டிருக்கிற வெட்டுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகளை நான் பேசுகின்ற காலத்தில், தொழில் துறையில் இன்னும் அதிகமான அளவுக்குக் கவனம் செலுத்த வேண்டுமென்று சர்க்காருடைய திறமையைத் தூண்டுவதற்காக இந்தக் கருத்துக்களைச் சொல்லுவதாக சர்க்கார் கட்சியினர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல திட்டம் உண்டா?

"பொதுவாக, தொழில்துறையைப் பொறுத்தவரையில் இந்த சர்க்காருக்கு ஒரு நல்ல திட்டம் இல்லை என்று நான் குற்றஞ் சாட்டவிரும்புகிறேன். அம்மாதிரி குற்றஞ்சாட்ட விரும்புகிற நேரத்தில், அவர்களுக்கு ஒரு திட்டம் இல்லாததற்குக்காரணம் திட்டம் வகுக்கின்ற பொறுப்பு அவர்களிடம் இல்லை என்ற சமாதானத்தை அவர்கள் சார்பில் நான் தேடிக் கொள்கிறேன். அப்படித் தேடிக் கொள்கின்ற நேரத்தில், மாநில ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்கள், திட்டம் வகுக்கின்ற பொறுப்பு வேறு ஒரு இடத்தில் இருப்பது தங்கள் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்ற கருத்துப் பட, தங்களுடைய சொல்லையும், செயலையும் ஓரளவுக்குப் பக்குவப் படுத்திக் கொள்வார்களேயானால், தொழில் துறையில் நல்ல திட்டங்கள் வகுப்பதற்கு இந்த மாநிலத்திற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கும் என்று கருதுகிறேன். நான் இதற்கு நாட்டுப் பிரிவினையை ஆதாரமாகக் காட்டவில்லை. அப்படி ஆதாரமாகக் காட்டினால், அதனால் ஆட்சியாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம்.

ஜப்பானைப் பாருங்கள்

"ஆகையினால், நாட்டுப் பிரிவினையை நான் ஆதாரமாக வற்புறுத்தாவிட்டாலும்கூட, ஜப்பான் நாட்டில் பொதுவாக நடப்பது பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். அந்த நாட்டில், அந்தந்த பிரதேசங்களுக்குத் (ரீஜினல் போர்டு) தொழில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாத வகையில் பொதுவான திட்டங்கள் வசதியாக இருக்கின்ற நேரத்தில், அந்தந்தப் பிரதேசங்களுடைய திறமைக்கும், தட்பவெட்ப நிலைமைக்கும், மக்களுடைய வருவாய்க்கும் உகந்த நிலைமையில் தேவைப்படி திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள்; இம்மாதிரி வழியில் ஜப்பான் நாட்டில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

நாடு நன்கு அறியுமே!

"தொழில் துறையில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பதை ஒரு கட்சி எடுத்துச் சொல்லி, அதை மாற்றுக் கட்சி மறுக்கும் பிரச்சினை இல்லை. எல்லாக் கட்சியில் உள்ளவர்களும் தொழில் துறையிலே தென்னாடு பின்தங்கியிருப்பதை அறிவார்கள். தொழில் துறையில் நம் முன்னேற்றத்திற்காகத் திட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட தென்னாட்டினுடைய வளர்ச்சியை முக்கியமாகக் கருதாதபடி, நம்முடைய மாநில அரசு கேட்ட தொகையைப் பெற முடியாமல்கூட திகைத்துத் திரும்பியதையும் நாடு பூராவும் நன்றாக அறிந்திருக்கிறது. நம்முடைய பொருளாதாரத் திட்டத்தை அகில இந்திய அடிப்படையிலே வைத்திருக்கிற வரையில்—அகில இந்தியத் திட்டங்கள் நாட்டிலே அமுல் நடத்தப்படுகிற வரையில், உண்மையிலேயே பல பிரதேசங்கள் பஞ்சப் பிரதேசங்களாக—வேண்டுமென்று அல்ல; விரும்பினாலும்கூட முன்னேற்றத்திற்கு வழி வகுக்க முடியாத் காரணத்தினாலே—பஞ்சப் பிரதேசங்களாகத்தான் இருக்கும்.

முடியாத காரணத்தினால் இந்த நிலைமை

"உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால்—எங்கள் கட்சியிலே நாங்கள் எப்பொழுதுமே ஏதோ வேடிக்கையாக எடுத்துக் காட்டுகிறோம் என்று நாட்டை ஆளுகின்ற கட்சி அலட்சியம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்—உடல் முழுவதும் குளிக்க வேண்டுமானால், முதுகுப்புறத்தைத் தேய்ப்பதற்கு வாலிபர்களாக உள்ளவர்கள் மனைவிமார்களையும், வயதானவர்கள் தங்களுடைய துணைவர்களையும் வைத்துக் கொள்ளுகிறார்கள். சாதாரணமாக, நாடு பூராவுக்கும் பொருளாதாரத் திட்டம் போடுகின்ற நேரத்தில், சில பகுதிகள் பஞ்சப்பிரதேசங்களாக—வேண்டுமென்றல்ல; முடியாத காரணத்தினால் — ஆக்கப்பட்டு வருகின்றன.

வருவாயும் குறைவு—பிழைப்பும் மோசம்!

"அகில இந்திய நீதியில் தரப்பட்டிருக்கிற புள்ளி விவரத்தில் கூட, பம்பாய் மாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 43 பேர்கள் என்றும்—அவர்களால் பாதுகாக்கப்படுகின்றவர்கள் 57 பேர்கள் என்றும்; சென்னை மாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 31 பேர்கள் என்றால்—அவர்களால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் 69 பேர் என்றும் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

"ஆகையினால் இங்கே சம்பாதிக்கின்றவர்கள் தொகையும் குறைவு; அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை வைத்துக் கொண்டு, பிழைப்பு தேட வேண்டியவர்களின் தொகையும் அதிகமானதாக இருக்கிறது.

"பிழைப்பு எந்த அளவுக்கு கிடைக்கின்றது என்று பார்த்தால், தென்னாட்டிலே உழவு நாட்கள் ஆண்டு ஒன்றுக்கு 181 என்றால்—அதே உழவனுக்கு வடநாட்டிலே 292 நாட்கள் என்றும்; தென்னாட்டிலே உழவனுக்கு கிடைக்கின்ற வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 382 என்றால்—வடநாட்டிலே உழவனுக்குக் கிடைக்கின்ற வருவாய் ரூ. 512 என்றும் சர்க்கார் தருகின்ற புள்ளிவிவரங்களே சொல்லுகின்றன.

இடக்கு பேசி மடக்க முயலுவதேன்?

"புள்ளி விவரங்களிலுள்ள நன்மை-தீமையைப் பற்றி நான் ஓரளவுக்கு அறிந்திருக்கின்றேன் என்றாலும், சர்க்கார் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. எந்த வகையில் பார்த்தாலும் வடநாட்டுக்கும்—தென்னாட்டுக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கின்றது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது, ஆளும் கட்சியிலுள்ளவர்கள், எரிச்சல் ஏற்படும் என்று நினைத்தோ அல்லாமலோ—அடிக்கடி, 'வடக்கு—தெற்கு' என்று கேலி செய்வது போன்று ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்து, இடக்கு பேசி மடக்கி வருகிறார்கள். நாங்களும் இதைப் போன்று சொல்ல முடியும்.

"இவ்விதம்பேசுவதின்காரணம், நாங்கள் சொல்லும் உண்மையைப் பார்த்து அவர்களின் மனம் 'படக்' 'படக்'கென்று அடித்துக்கொள்ளுகிறது; மற்றொரு வகையில், பிரச்சினையை மழுப்புவதற்காகச் சொல்லப்படுகிறது.

தாழ்த்திவிட்டவர்களின் 'தூய்மை'யான வாதம்!

"'நாங்கள், எல்லாம் ஒன்று—அகில இந்தியா பூராவும் ஒன்று என்று பார்த்து காரியங்களை நடத்துவோம்; நீங்கள் பிளவு மனப்பான்மையுடையவர்கள்; நீங்கள் பேத புத்தியோடு பிரச்சினைகளைப் பார்க்கிறீர்கள்' என்ற வாதங்களைச் சொல்லி பிரச்சினையை மழுப்புகின்றார்கள்.

"சென்னையில் பொருளாதார நிபுணராக இருந்த திரு. பி. ஜே. தாமஸ் அவர்கள் சென்ற கிழமையில் குறிப்பிட்டிருப்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்—'முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி—பொதுவாக தென்னாட்டைவிட வடநாடு வளம் பெறுகிறது' என்று எடுத்துச் சொல்லி, 'தென்னாடு முன்னேறவில்லை என்று தென்னாட்டார்கள் பொறுமையின் காரணமாக பேசவில்லை' என்பதையும் குறிப்பிட்டுவிட்டு, ஒரு பகுதியில் மாத்திரம் விலைவாசி ஏறியிருப்பதன் காரணங்களையும் எடுத்துச் சொல்லி, 'இதை மாற்றுவதற்கு தென்னாட்டுக்கு ஒரு திட்டம் தேவை' என்பதையும் எடுத்துச் சொல்லி, 'இதற்கு, நல்ல பாதுகாப்பு உணர்ச்சியோடு அரசியல் கலப்பு இல்லாதவர்கள் பணியாற்றினால் நன்மையாகும்' என்று அவர் கூறியிருக்கிறார்.

நான்கு திசைகளிலிருந்தும் காற்று வீசுகிறது

"எந்த அளவுக்கு நாங்கள் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லுகின்றோமோ, அது இன்று நாலுபக்கங்களிலும் பேசப்படுகிறது; ஆதரிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்தக் காற்று எந்தப்பக்கம் அடிக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்பதைக் கூற விரும்புகிறேன். இது வெறும் கேலிக்குரியது என்று கருதக்கூடாது.

'உழைப்பை'க் காட்டி நாட்டை உருக்குலைப்பதா?

"'நாட்டுக்கு எது தேவை என்பது எங்களுக்குத் தெரியும்; நாட்டில் எவ்விதம் இருந்தாலும் நீங்கள் கவலைப்படவேண்டிய தேவையில்லை; நாட்டுக்கு உழைத்தவர்கள் நாங்கள்தான்; எங்களுக்குத்தான் அந்த உரிமையுண்டு' என்று ஆளும் கட்சியிலிருந்து பதில் அளிக்கப்படுகிறது. நாட்டுக்கு உழைத்தவர்களுக்கு நாங்கள் தலைவணங்குகிறோம்; அவ்விதம் தலைவணங்குகின்ற நேரத்தில், அதை வைத்துக் கொண்டு ஆட்சியில் இருக்கும் அமைச்சர்களால் நாடு எவ்விதம் நடத்தப்படுகிறது என்பதைப் பார்த்து பரிதாபப்படுகிறேன்.

"நாட்டை மீட்டு நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்றுள்ள உணர்ச்சி, அதன்மூலம் எழுகின்ற நம்பிக்கை அந்தப் பக்கத்திலுள்ளவர்களுக்கு மாத்திரம்தான் இருக்குமென்பதல்ல; இந்தப் புறத்தில் இருப்பவர்களுக்கும் அந்த நம்பிக்கை வரக்கூடும் என்பதை, சபாநாயகர் மூலமாக அவர்களுக்குப் பணிவன்புடன் கூறிக் கொள்கிறேன்.

தியாகம் என்பது பரம்பரை உரிமையல்ல!

"இந்த சட்ட மன்றத்தில் அடிக்கடி கூறப்படுகிறது—'நாங்கள்தான் இந்த நாட்டிக்குத் தியாகம் செய்திருக்கிறோம்; நீங்கள் என்ன செய்தீர்கள்?'—என்று!

"என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில்எங்களைச் சார்ந்திருந்த தலைவர்கள் வேண்டுமானால் நீங்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளலாம்; அவர்களில் ஒரு சிலர் இன்றையத்தினம் உங்கள் நண்பர்களாகி விட்டார்கள் (கைதட்டல்); எங்களைப் பொறுத்தவரையில், 'வருக்கிளைத்தவன் பின்னையார்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 26—7—57 வெள்ளி

பண்டிதரின் அழைப்பு!

சுதந்திரத் தனி நாடு வேண்டும் எனக் கோரும் நாகர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்ற பிடிவாதத்துடன், நாக தீவிர வாதிகளின் கிளர்ச்சிகளை மூர்க்கத்தனமாக ஒடுக்குவதற்கு டெல்லிப் பெரியவர்கள் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகளையும், இதில் நமக்குள்ள கவலையையும் சென்ற திங்களில் இங்கு ஆராய்ந்தோம்.

இப்போது பாராளுமன்றத்தில் பேசிய பண்டிதர், 'நாக மலைப் பகுதிக்கு எவ்வளவு சுய ஆட்சி உரிமை வழங்க முடியுமோ அவ்வளவும் வழங்க நாம் தயாராயிருக்கிறோம்; இதற்காக அரசியல் சட்டத்தின் ஆறுவது 'ஷெட்யூலை'த் திருத்தவும் தயார்தான்' என்று குறிப்பிட்டுவிட்டு, 'ஆனால், இதனை பரஸ்பரம் பேச்சு வார்த்தைகள் மூலமே சாதிக்க முடியும்' என்று கூறியிருக்கிறார்.

இது, டெல்லிப் பெரியவர்களது, நாகர் விஷயம் பொறுத்த கடந்த காலத்திய போக்கில் ஏற்பட்டுள்ள ஒரு விவேகமான மாறுதல் என்பதைத் தெளிவாக்குகிறது.

'கிளர்ச்சிக்காரர்களைப் பழிவாங்கும் நோக்கமும் எங்களுக்கு இல்லை' என்று பண்டிதர் குறிப்பிட்டிருப்பதும் இதைத் துலக்கும் அம்சமாகும்.

'சுதந்திரத் தனிநாடு கோருபவர்களுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை; யுத்தப் பிரகடனம்தான் அவர்களை வழிக்குக் கொண்டுவரும்' என்று கொக்கரித்தவர்கள், தங்களுடைய நடவடிக்கைகள் தொடர்ந்து தோல்வியுற்று வருவதைக் கண்ட பிறகே—அதனால் தங்களை வேகமாகச் சூழ்ந்துவரும் மானக்கேட்டினை உணர்ந்த பிறகே, போக்கில் ஒரு சிறு மாறுதலை அறிவிக்கிறார்கள். இந்தத் தோல்வியை மறைத்துக்கொள்ளத்தான், 'இராணுவ நடவடிக்கைகள் தன்னடக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டன' என்று பெருமை பூசிக்கொள்ளவும் பண்டிதர் முந்தியிருக்கிறார்.

எப்படியாயினும், இராணுவ நடவடிக்கைகளைவிட பேச்சு வார்த்தைகளின் மூலம்தான் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முடியும் என்பதை இத்தனை காலங்கடந்தேனும் 'பஞ்சசீலப் பிதா'க்கள் கற்றுக்கொண்டிருப்பதை, விடுதலை விரும்பிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கலாம்.

ஆனால், பேச்சுவார்த்தைகளுக்குப் பண்டிதர், இதுகாறும் ஒரு கடுமையான நிபந்தனையை விதித்து வந்திருக்கிறார். அதுதான், கிளர்ச்சித் தலைவர்கள், எதை ஜீவாதாரமானது என்று கூறுகிறார்களோ, அந்த 'தனி நாடு வேண்டும்' என்ற சுதந்திரக்கோரிக்கையைக் கைவிட்டுவிடவேண்டும் என்பது! இந்த, நிபந்தனை பண்டிதர்களின் பேச்சுவார்த்தைக்கு இணக்கமில்லாப் போக்கை எடுத்துரைக்கும் ஒரு சொற்றொடராகவே கருதப்பட்டது.

ஆனால் இந்தமுறை, பண்டிதர் 'கிளர்ச்சிக்காரர்கள் பலாத்காரத்தைக் கைவிட்டுவிடவேண்டும்' என்ற நிபந்தனையுடன் நிறுத்திக்கொண்டிருக்கிறார். 'சுதந்திரக் கோரிக்கை' பற்றிய நிபந்தனை விதிக்கப்படவில்லை. 'எவ்வளவு சுய ஆட்சி உரிமை வழங்க முடியுமோ அவ்வளவு வழங்கத் தயார்' என்றும் அறிவித்திருக்கிறார். முன்னைய பிடிவாதத்திலிருந்து பண்டிதர் ஒரு படி கீழிறங்கி வந்திருக்கிறார் என்பதை மட்டுமே இது காட்டும்; நாகர்களின் சுதந்திரக் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்துவிட்டதாக நிச்சயம் பொருள் தரவில்லை. எனவே, 'சுதந்திரக் கோரிக்கை பற்றி மட்டுமே நாங்கள் பேசுவோம்' என்று முன்பு ஓர்முறை பறைசாற்றிய நாகர் கிளர்ச்சித் தலைவர்கள், பண்டிதரின் அழைப்பை ஏற்றுக்கொள்வார்களா என்றுதான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

நாகர் பிரச்சினை பற்றிய பாராளுமன்ற விவாதத்தில், 'டெல்லி புதிதாக ஒரு ஏகாதிபத்தியம் உருவாக்கி வருவது' பற்றி கண்டிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, 'நாகர்கள் தங்கள் இனம் பற்றி பெருமைப்படுகிறார்கள்; தங்களின் தலைவர்களுக்கு சமமான அந்தஸ்து தரப்பட்டாலன்றி, சர்க்கார் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த அவர்கள் தயாராக இல்லை' என்ற உண்மையையும் வெளிக்கொணரப்பட்டிருக்கிறது.

தங்களிலிருந்து வேறுபட்ட ஒரு இன மக்களை, தங்களைவிடத் தாழ்வாக மதிக்கும் அகம்பாவம் கொண்ட வடநாட்டுப் பெரியவர்கள், இந்த மேற்சொன்ன உண்மையை உணருவது, பிரச்சினைக்கான பரிகாரத்தை அருகில் கொண்டுவர உதவும் என்பதில் சந்தேகமில்லை.

குரலில் தொனித்த கடுமை தணிந்திருக்கிறது — காட்டி வந்த பிடிவாதம் தளர்ந்திருக்கிறது என்பதைக் காட்டும் வகையில் பேசியுள்ள பண்டிதர், தொடர்ந்த சிந்தனை மூலம், நாகர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்றே விடுதலை விரும்பிகள் கோருவர்.

நாகர் கிளர்ச்சித் தலைவர்கள் பாராளுமன்றத்தில் பண்டிதர் விடுத்த வேண்டுகோளுக்குத் தரும் பதில், பண்டிதரின் நல்லெண்ணத்தில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பொறுத்ததாகவே இருக்கும். விளைவுகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

துவரை சாகுபடி மதிப்பு

தமிழ்நாட்டில் 1956—57-ம் ஆண்டில் 1,57,500 ஏக்கரில் துவரை பயிராயிற்று.

நீலகிரியில் துவரை பயிராகவில்லை. செங்கற்பட்டு, கன்னியாகுமரி மாவட்டங்களில் முந்திய ஆண்டு அளவிலும், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் குறைந்த அளவிலும், இதர மாவட்டங்களில் அதிகமாகவும் துவரை பயிராயிற்று.

காசி பல்கலைக் கழக நிர்வாகச் சீர்குலைவு

விசாரணை நடத்த டாக்டர் இலட்சுமணசாமி தலைமையில் குழு

புதுடில்லி, ஜூலை 23—

காசி பல்கலைக் கழக நிர்வாகம், குழு ஒன்றின் பரிசீலனைக்கு விடவேண்டிய அளவுக்கு ஒழுங்கு குலைந்து கிடப்பதாக தெரிகிறது.

பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் குறித்து விசாரணை நடத்தி, நிர்வாகச் சீர்திருத்த சிபாரிசுகள் தருமாறு, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்) அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமித்திருக்கிறார் என்று தெரிகிறது.

குழுவில் டாக்டர் பி. சுப்பராயன் எம்.பி., சுசேதா கிருபளானி எம்.பி., நவரோஜி வாடியா, மற்றும் தலைமை உயர் நீதிமன்ற முன்னைய தலைமை நீதிபதி எம். சி. மகாஜன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற கலவரங்களை மனதில் கொண்டு பொது ஒழுக்க நிலையை கவனிப்பது; இப்போது உள்ள பல்கலைக் கழக நடைமுறை விதிகளை ஆராய்வது; அவை பேராசிரியர்கள், இதர பல்கலைக்கழக அலுவலர்களிடை ஒரு ஒழுங்கு முறையை நிலைநாட்ட வலிவுடையவையா, போதுமானவையா என்பதைக் கண்டறிவது; பல்கலைக்கழகச் சட்டத்தைப் புனராலோசிப்பது போன்ற வேலைகளை குழுவினர் செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கின்றனர்.

சிக்கனம் பேசுவோர் நடைமுறை!

சென்னை அமைச்சர்களின் புதிய கார்கள் பற்றி தகவல்

சென்னை, ஜூலை 26—

1956-ம் ஆண்டிலும் 1957 மார்ச் திங்கள் வரையிலும் அமைச்சர்களுக்காகவும், சட்டமன்றத் தலைவர் உபயோகத்திற்காகவும் மொத்தம் நான்கு புதிய கார்கள் வாங்கப்பட்டதாம்.

அதற்காக ரூ. 49,367 செலவிடப்பட்டதாக சட்டமன்றத்தில் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

'சிக்கனத்தைப் பற்றி பேசிவிட்டு, இப்படி ஆடம்பரமான கார்களை வாங்கியதேன்?' என்று கேட்டதற்கு, 'பெரிய கார்களுக்கு பராமரிப்பு செலவு மிகவும் குறைவு' என்று அமைச்சர் காரணம் கூறினர்.

மாவட்டவாரியாக ஆராய்ச்சி நடைபெறுமா?

க. அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜூலை 23—

புதிய மாநில அமைப்பு ஏற்பட்டதின் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இயற்கைச் செல்வங்களைக் கண்டுபிடிக்கும் 'துப்புரவு' வேலைகளை மத்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்று சட்டசபையில் தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

"பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் ஏதேனும் கனிப்பொருள் இருப்பதாகக் கூறப்படுவதால், அரசாங்கம், மாவட்டவாரியாக 'துப்புரவு' நடத்த முன்வருமா?' என்று தோழர் க. அன்பழகன் கேட்டதற்கு அமைச்சர், 'இயலாது' என்று பதிலளித்தார்.

கீழ் வகுப்புகளிலிருந்தே ஆங்கிலக் கல்வி

பம்பாய் சர்க்கார் பரிசீலனை

பம்பாய், ஜூலை 23—

"ஆங்கிலத்தை மீண்டும் செகண்டரி பள்ளிகளில், கீழ் வகுப்புகளிலிருந்தே கற்றுத் தருவது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது; இது குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்க அதிகாரிகள், மற்றவர்கள் அடங்கிய ஒரு செகண்டரி கல்வி குழு நியமிக்கப்பட்டிருக்கிறது,"

என்று, பம்பாய் கல்வி மந்திரி ஹிதேந்திர தேசாய் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

"துரதிருஷ்டவசமாக, நிபுணர்கள் இந்த விவகாரத்தில் ஒரு ஒன்றுபட்ட கருத்துடையவர்களாக இல்லை; ஆனாலும், சர்க்கார் இந்த விஷயத்தில் ஒரு சரியான முடிவு காண விழைகின்றனர்"

என்றும் அவர் கூறியுள்ளார்.

பம்பாய் மாநிலத்தில் இப்போது சில இடங்களில், மேல் வகுப்புகளில் மட்டுமே ஆங்கிலம் கற்றுத் தரப்படுவதாகவும், மற்றும், இடத்திற்கு இடம் வேறுபட்ட முறையில் ஆங்கிலக் கல்வி இருந்து வருவதாகவும் தெரிகிறது.

மாட்டுக்கு சூடு போடலாமா!

தோழர் க. அன்பழகன் கேள்வி

சென்னை, ஜூலை 24—

அரிசன மக்களுக்கு உதவியளிக்கும் நோக்கத்துடன் தரப்படும் மாடுகளுக்கு 'H. W.' என்று சூடு போட்டுத்தர அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும், குலுக்குச் சீட்டு முறையில் முடிவு செய்ய இருப்பதாகவும் அமைச்சர் கக்கன் சட்டசபையில் அறிவித்தார்.

"இவ்வாறு மாடுகளுக்கு 'சூடு' போடுவது, மிருகங்களையும் அரசாங்கம் துன்புறுத்துவதாகாதா?" என்று தோழர் க. அன்பழகன் கேட்டதற்கு, அமைச்சர், நன்மையைக் கருதி அவ்வாறு செய்வதாகக் கூறினர்.

'தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை மறுத்துவிட முடியாது'

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூட்டு ஆசிரியர் கே. ரங்காச்சாரி கருத்து

சென்னை, ஜூலை 23—

"தென்னாடு (தொழிலபிவிருத்தித் திட்டங்களில் டெல்லி சர்க்காரால்) புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை முழுவதுமாக மறுத்துவிட முடியாது; ஆனால், இந்தக் குற்றச்சாட்டை வற்புறுத்துவதற்கு இது தருணமல்ல"

என்று, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூட்டு ஆசிரியரான கே. ரங்காச்சாரி அவர்கள், தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரி பொருளாதாரச் சங்கத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் இன்று குறிப்பிட்டார்.

"புதிய அபிவிருத்தித் திட்டங்களை நடத்துவதற்கான அடிப்படைச் சாதனங்கள்தான் இப்போது உருவாக்கப்படுகின்றன; இவை தயாரான பிறகு, பிரதேச வாரியாகத் திட்டமிடுவதில் உள்ள சீர்கேட்டினைச் சரிசெய்துகொள்ளலாம்; அப்போது தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை வற்புறுத்தலாம்" என்றும் அவர் கூறினாராம்!

இரயில்வே சிப்பந்திகளுக்கு குடியிருப்பு வசதி

ரூ. 35 கோடி செலவில் 64,500 விடுகள் கட்ட ஏற்பாடு

புதுடில்லி, ஜூலை 24—

இரண்டாவது திட்ட காலத்தில் இந்திய சர்க்கார், இரயில்வேக்கள் எல்லாவற்றிலும் மொத்தம் ரூ. 35 கோடி செலவில் சகல பிரிவுகளையும் சேர்ந்த சிப்பந்திகளுக்காக மொத்தம் 64,500 வீடுகளை நிர்மாணிக்கவும், ஏற்கனவேயுள்ள சிப்பந்தி வீடுகள் சிலவற்றை அபிவிருத்தி செய்யவும் உத்தேசித்திருக்கிறது என்று மத்திய இரயில்வே மந்திரி, மக்கள்சபையில் கூறியுள்ளார்.

பல்கலைக் கழகம் அவசியமில்லையாம்!

புதுடில்லி, ஜூலை 24—

'நாட்டு மருத்துவ முறைக்கு மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்று அவசியமென்று இந்திய சர்க்கார் கருதவில்லை' என்று, மக்கள் சபையில் சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

மூடப்படுவதேன்?

சூரத், ஜூலை 24—

பம்பாய் போன்ற மார்க்கெட்டுகளில் செயற்கைப் பட்டுக்குக் கிராக்கி இல்லாததால், சூரத்திலுள்ள 13 சிறு ரக பட்டுத் தொழிற்சாலைகளை மூடிவிடுவதென முன்னறிவிப்பு தரப்பட்டிருக்கிறதாம்! இம்முடிவினால் 400-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழப்பாராம்!

நாட்டில் தற்போது 16 சர்க்கரை ஆலைகள் வேலையின்றி மூடிக் கிடக்கின்றனவாம்.

'இதில் 10 ஆலைகளில் இயந்திரங்கள் பழுதடைந்து விட்டதால் அவைகளைப் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது; மற்ற 6 ஆலைகள் நிதிப் பற்றாக்குறையினால் மூடப்பட்டுக் கிடக்கிறது' என்று மக்கள்சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

'இலாபகரமில்லாமல் இயங்கும் ஆலைகளை மேற்கொள்ளும் யோசனை சர்க்காருக்கு இல்லை' என்று, மத்திய விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

காரணம் என்ன?

இலாகாபூர்வமாக எல்லா இரயில்வேக்களிலும் நடத்தப்பட்டு வரும் உணவு விடுதிகளில், 1956—57-ல் மொத்தம் ரூ. 12 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

கண்டிராக்டர்கள் விநியோகம் செய்வதைவிட மிகவும் உயர்தரமான பண்டங்களை இரயில்வே இலாகா விநியோகம் செய்வதே இந்த நஷ்டத்திற்கு முக்கிய காரணமாம். மத்திய சர்க்கார் அடிப்படையில் உணவு விடுதி சிப்பந்திகளுக்கு சம்பளங்களும், மற்றுமுள்ள எல்லா வசதிகளும் தரப்படுகிறதாம்.

இந்தியாவில் ஜனநாயகம் உருவாகியுள்ளதா?

எண்ணத்திற்கு முரணுகவும் ஆட்சிக்கு அரணுகவும் அதைப் பயன்படுத்தும் விந்தை

எதிர்க் கட்சி வளராவிடின் எதேச்சாதிகாரமே வளரும்

மதுரை சிறப்புக் கூட்டத்தில் கி. மனேகரன்

14—7—57 காலை 10-மணிக்கு மதுரை நகர் தி. மு. கழகச் சார்பில், மதுரை பழனி திரையரங்கில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் கி. மனேகரன் அவர்கள் 'ஜனநாயகம்' எனும் தலைப்பில் ஆற்றிய உரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

"சனநாயகம் என்பது ஒரு தேவையான—அவசியமான அரசியல் தத்துவமாகும்; அதனுல் தான், சனநாயகத்தைப் பிடிக்காதவர்கள்கூட அதைப் பின்பற்றித் தீரவேண்டிய அவசியத்திற்குள்ளாகியுள்ளனர். 'தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' என்றிருந்த அந்த ஆதி நாட்களில், 'பலமுள்ளவன்தான் இந்த நாட்டை ஆளமுடியும்; அது அற்றவன் ஆளமுடியாது' என்றிருந்தது. அது 'மானர்க்கி' எனப்படும்.

"அப்படி அரச பீடத்தை அடைந்தோர் பொதுமக்கள் வரிப் பணத்தை விழுங்கி ஏப்பமிட்டு வாழ்ந்தனர். இதனை மக்கள் அனைவரும் எதிர்த்தனர் என்ருலும், மக்களின் ஒரு சாரார்தான் அந்த எதிர்ப்புக் குரலைக் கிளப்பினர். இது இரண்டாம் கட்டம்—'அரிஸ்ட்டோகிராசி' எனப்படும். இதனுல் ஒரு சிலாது சுயநல நோக்கங்கள் நிறைவேறும் திட்டங்களுக்குத்தான் வாய்ப்பு ஏற்பட்டது. அதன்பின், 'டிமாக்ரசி'—ஜனநாயகம் வந்தது.

"ஜனநாயகம் இருவகைப்படும். கிரேக்க நாட்டில் ஜனநாயகம் உருவான நேரத்தில் அதற்கு (Direct Democracy) என்று பெயர். ஏனென்ருல், அங்கே அரசுகள் 'City States' என்ற பெயரில் சிறியவையாயிருந்தன; 50 ஆயிரம் 60 ஆயிரம் மக்கள் தான் ஒவ்வொரு அரசிலும் இருந்தனர்; மக்கள் நேரடியாக ஆட்சியில் கலந்துகொண்டனர். பின், மக்கள் தொகை பெருகியது; எல்லைக்கோடு விரிந்தது; ஆட்சி அலுவல்கள் பெருகின. அதனுல், புது மாதிரியான முறை எழுந்தது; மக்களின் பிரதிநிதிகள் ஆண்டனர். அதைத்தான் 'மறைமுக ஜனநாயகம்' என்கிருேம்; இன்று பல்வேறு நாடுகளில் அது பொலிவுடன் பூத்துக் குலுங்கக் காண்கிருேம்!

"கிரேக்கத்தில் வளர்ந்த ஜனநாயகத்தில் இல்லாத ஒன்று இந்த ஜனநாயகத்தில் சிறந்திருந்தது; நீங்களும் நானும் பாராட்டக்கூடியது. அதுதான் ஜனநாயகத்திற்கே உயிரோவியமான 'Opposition' — அதாவது 'எதிர்க் கட்சி' அமைவதாகும். நாம் வளர வளர, நம் எண்ணங்களும் வளர வளர இப்படிப்பட்ட பல மாற்றங்கள் ஜனநாயகப் பாதையில் தோன்றுகின்றன.

"அவ்வாறு வளர்ந்ததால் 'டைரக்ட் டெமாக்ரசி', 'பார்லிமெண்டரி டெமாக்ரசி', 'ரிபப்ளிக்கன் டெமாக்ரசி', எனப் பலப்பல முறைகள் வேறுவேறு நாடுகளில் தோன்றியுள்ளன.

"ஆனல், இந்தியாவில் வளர்ந்த ஜனநாயகத்தையோ எந்தப் பட்டியலில் சேர்ப்பதென்று திண்டாடுகிறேன். ஜனநாயகம், படித்தவர்களால் வளர்க்கப்படவேண்டிய ஒன்று; ஜனநாயகம் வளர்க்கப்படுவதாகச் சொல்லப்படும் இந்த நாட்டிலோ, ஆட்சியிலே தற்குறிகள்—பிறவியிலேயே முட்டாள்கள்-பள்ளிக்குச் செல்வதே பாவம் என்றெண்ணியோர்க்கு இடம்! இன்றைய நிலையிலே பல அரசியல் திட்டங்களை ஒப்பு நோக்கவும்-ஒக்கு நோக்கவும் நமக்குப் படுவது, ஜனநாயகம் தான் இந்த அரசியல் நிலைகளுக்கு ஏற்றது என்பதே!

"பண்டித நேரு, ஜனநாயகத்தைப் பற்றி நிறையப் படித்திருக்கிருர்; அத்துடன் சரி! (கைதட்டல்) ஜனநாயகத்தைப் பற்றி நிறையப் பேசுகிருர்கள்; நாட்டு மக்கள் உணரவும் வேண்டுமென்று எண்ணுகிருர்கள். நாட்டு மக்கள் உணர்ந்தவுடன், அவர்களே வேருெரு புதிய திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசுகிருர்களே தவிர, நாட்டிலே ஒரு எதிர்க் கட்சி தேவை என்ற எண்ணம் வளர வாய்ப்பு ஏற்படுத்துவதில்லை. ஜனநாயகம் அவர்கள் எண்ணத்திற்கு முரண்; ஆனுல் அச்சொல்லே அவர் ஆட்சிக்கு அரண்!

"எதிர்க்கட்சி இல்லாவிட்டால் ஆட்சிபீடம் அச்சம் இல்லாமல் போய்விடும்; அதனுல் அராஜகம் நிலவும்.

"இன்று எதிர்க்கட்சி இல்லாவிட்டாலும் பரவாயில்லை; அதை உருவாக்கும் திட்டமாகிலும் உதித்திருக்கிறதா என்ருல் அதுவும் இல்லை!

"எதிர்க்கட்சியின் வளர்ச்சி தடுக்கப்படுகிறதென்ருல், ஜனநாயகம் தடுக்கப்படுகிறதென்று பொருள்; எதேச்சாதிகாரம் வளர்கின்றதென்று பொருள்! இது ஜனநாயகத்திற்கு ஓர் அபாய அறிவிப்பு!

"ஜனநாயகம் பேசுவோர் 112 வரிகளை விதிக்கையில் 'கூடாது' என்று சொன்னதெல்லாம் மறக்கப்பட்டன. திட்டம் தீட்டும் நேரத்தில் அதை ஒதுக்கி வைத்திருக்கிருர்கள். திட்டம் தீட்டுகையில் மக்கள் நிதிநிலையைக் கவனிக்காததால் அது, இலட்சியத்திலேயே நின்று விடுகிறது.

"பத்திரிகையாளர்கள் இந்த நாட்டிலே ஒரு நல்ல ஜனநாயகம் உருவாக நிலவத் தம்மை தத்தம் செய்ய வேண்டும்.

"நாம் வடக்கு-தெற்கு என்கிற போதும், சென்னைக்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் தேவை என்கிறபோதும் அது ஜனநாயகக் குரல் ஆகிறது.

"இன்று ஜனநாயகத்திற்கு இரண்டுவகை ஆபத்துக்கள் இந்நாட்டில் வருகின்றன. ஒன்று—ஆணவத்தால்; இன்னென்று — கல்லாமையால்! நமக்கு வடக்கிலிருந்துவரும் ஆபத்து ஆணவத்தால்! தெற்கிலிருந்து வருவது கல்லாமையால்!

"தனி மனிதன் அன்ருட அரசியலை ஆராயும்தன்மை-திறமை வளரவேண்டும்! எனவே, ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்! அது வளரட்டும்—வாழட்டும் என்று வாழ்த்து கூறுகிறேன்"

கேலி கலந்த பதிலை மந்திரி கூறுவதேன்?

சட்டசபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டது

சென்னை, ஜூலை 24—

ரெவினியூ இலாகா அமைச்சர் மாணிக்கவேலர் சட்டசபையில் துடுக்காகவும், பொருத்தமற்றும் கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காமலும்கேலியும்கிண்டலும் கலந்தும் பதிலளிப்பதை கண்ட சில உறுப்பினர்கள் இன்று சட்டசபையில் அது குறித்து ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினர்.

மன்றத் தலைவர் குறிக்கிட்டு, 'அமைச்சர்கள் தரும் பதில் உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை' என்று கூறினர்.

அமைச்சரின் துடுக்குத்தனம்!

சென்னை, ஜூலை 24—

'சென்னை மாநிலத்தில் தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிகமாகக் குஷ்ட வியாதி பரவியுள்ளது' என்று அமைச்சர் மாணிக்கவேலர் சட்டசபையில் தெரிவித்தார்.

உலகிலேயே அதிகமான குஷ்ட வியாதிகள் தெ. ஆ. மாவட்டத்தில் இருப்பது அமைச்சருக்கு தெரியுமா?' என்று கேட்டதற்கு, அமைச்சர், 'இந்த வகையில் அம்மாவட்டத்திற்கு பெருமையோ, சிறுமையோ இருக்கட்டும்' என்று கேலியாகக் கூறினர்.

காங்கிரஸ் கொள்கை இதுதான் போலும்!

சென்னை, ஜூலை 24—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 44 மார்க்கங்களில் பஸ்கள் ஓடுகின்றன என்றும், 800 மைல் தூரத்திற்கு பஸ் வசதி உள்ளது என்றும், இப்போது அங்கு தனியார் நடத்தும் பஸ்களை அரசாங்கம் ஏற்றுநடத்தும் நோக்கம் இல்லை என்றும் போக்குவரத்து அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் சட்டசபையில் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் போராட்டம்

பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற்ருல் தவிர்க்கப்படலாம்

மக்கள் சபையில் பிரதமர் பண்டாரநாயகாவின் நம்பிக்கையூட்டும் பேச்சு

கொழும்பு, ஜூலை 24—

தமிழர்களுக்கு சிங்களவருடன் எல்லாத் துறைகளிலும் சம அந்தஸ்து வேண்டுமெனக் கோரி, வரும் ஆகஸ்டு திங்களில் அறப்போர் துவங்குவதாக அறிவித்துள்ள தமிழரசுக் கட்சித் தலைவர்களை அழைத்து இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, நான்கு முறைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிருர்.

'போராட்டம்' அறிவிக்கப்பட்டதிலிருந்து, இலங்கை அரசியல் நிலை வெகுவாக சூடேறிவந்ததும், சிங்களவர்—தமிழர் உறவுகள் வெகுவாகப் பாதிக்கப்படும் என்ற அச்சம் மேலோங்கியதும், பண்டாரநாயகாவை, தமிழரசுக் கட்சியினரை அழைத்துப் பேச வைத்தது.

தமிழரசுக் கட்சியினர், துவக்க முதல், பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்குப் பேச்சுவார்த்தைகள் ஒரு சிறந்த வழி என்பதில் தங்களுக்குள்ள நம்பிக்கையை இடையருது தெரிவித்து வந்திருக்கின்றனர். அதனுல், அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தச் சம்மதித்தனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவு பற்றி மக்கள் சபையில் பேசும்போது பண்டாரநாயகா குறிப்பிட்டதாவது :—

"சர்க்காரின் அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகிச் செல்லாமல், எழுந்துள்ள பிரச்சினைக்கு ஒரு திருப்திகரமான பரிகாரம் தேடுவதில் நான் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறேன்; நாங்கள் கூடிப் பேசியிருக்கிருேம்; முடியை நெருங்கிக் கொண்டிருக்கிருேம். நாங்கள், நிகழவிருந்த ஒரு பெரிய 'ஆபத்தை'த் தவிர்த்துவிட்டோம் என்று சீக்கிரமே நாட்டுக்கு அறிவிக்க முடியும் எனக் கருதுகிறேன்."

அடுத்துப் பேசிய தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னியசிங்கம் குறிப்பிட்டதாவது :—

"பேச்சுவார்த்தைகளைப் பற்றி பிரதமர் கூறியதற்குமேல் நான் ஒன்றும் கூற விரும்பவில்லை; நாங்கள், பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிய வேண்டுமென விழைகிருேம் என்பதை மட்டும் கூற விரும்புகிறேன்."

நாகர்கோயிலில் பஸ் தொழிற்சாலை

ரூ. 3 இலட்சம் செலவில் துவங்க சென்னை சர்க்கார் முடிவு

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் ரூ. 3 இலட்சம் செலவில், சர்க்கார் பஸ் போக்குவரத்துக்கான தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளதாக தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் கூறியுள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மேலும் பல புதிய பஸ்கள் வாங்கி அனுப்பப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதி

பொதுத் திடல்கள் பற்றி சட்டசபையில் கேள்விகள்

சென்னை, ஜூலை 25—

'சென்னை நகரில் கான்ரான்ஸ்மித் திடலிலும், நேப்பியர் பூங்காத்திடலிலும் அரசியல் கட்சிகள் கூட்டம் நடத்த நகர சபையின் அனுமதியும், கலெக்டரின் அனுமதியும் தேவை' என்று சட்டசபையில், போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

இராஜாஜி மண்டபத்தில் ஒலிபெருக்கி வசதியுடன் கூட்டங்கள் நடத்த வசதியளிக்கப்பட்டுள்ளதாம்.

தோழர் ஏ. கோவிந்தசாமி :— "ஐலண்டு மைதானத்தில் பண்டித நேரு மட்டும் பேசுவதற்கு அனுமதி தரப்படுவதேன்?"

அமைச்சர் :—"அந்தத் திடல் இராணுவத்திற்குச் சொந்தமானதாகும்; இராணுவ இலாகாவின் அனுமதி பெற்றே கூட்டம் நடத்தப் படுகிறது" என்று அமைச்சர் கூறினர்.

வாயுமண்டலத்தில் ஆராய்ச்சியாம்!

ராக்கெட் மூலம் செய்யப்படும்

பால்ட்டிமோர் : வாயுமண்டலத்தின் மேல்பகுதியைப் பற்றி இதுவரையிலும் தெரியாமலிருக்கும் பல விவரங்களை தெரிந்து கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது. பூமியிலிருந்து 1 இலட்சம் அடி உயரத்தில் பறக்கக்கூடிய ஒரு பலூனிலிருந்து ஒரு ராக்கெட்டைச் செலுத்தி இது பற்றி ஆராய்ச்சி செய்யப்படும்.

மனிதனுல் செய்யப்பட்ட இயந்திரம் இதுவரையிலும் செல்ல முடியாத அளவுக்கு வாயுமண்டலத்தின் மேல்பகுதியில் இந்த ராக்கெட் செல்லுமாம்.

காஸ்மிக் கதிர்கள், பூமியின் ஆகர்ஷண சக்தி, வாயுமண்டலத்தின் வெளி விவரங்கள் முதலியன விமானப்படை விஞ்ஞானிக்கு இதன் மூலம் கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை நகர

கிளைக் கழக நிர்வாகிகட்கும் கழகத் தோழர்களுக்கும்

வேண்டுகோள்

சென்னை நகர சட்ட மன்றத் தொகுதிகளுக்கான பூர்வாங்க வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் விடுபட்டோ, தவறுதலாகவோ, மாற்றப்படக்கூடியதாகவோ, திருத்தப்படக்கூடியதாகவோ தங்கள் பெயரும், தங்களைச் சார்ந்தவர்களின் பெயரும் இருக்குமானல், உடனடியாக (ஆகஸ்ட் 1-கடைசி நாள்) சென்னை கார்ப்போரேஷன் ரேவினியூ ஆபீசருக்கு விண்ணப்பித்து சரிசெய்துகொள்ள வேண்டுகிருேம்.

ஆங்காங்குள்ள கழகத் தோழர்களை, தங்கள் தங்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சரியாக உள்ளனவா என்று பார்ப்பதிலும், சரியில்லாதிருந்தால் சம்பந்தப்பட்ட திருத்தம் செய்து கொள்வதிலும் அந்தந்த வட்டக் கிளையின் நிர்வாகிகள் போதிய முயற்சியும் ஊக்கமும் காட்டி தகுதி வாய்ந்த வாக்காளர் ஆகுமாறு கழகத் தோழர்களைத் தூண்டுவதுடன், தாங்களாகவே விண்ணப்பித்துக் கொள்ள வசதியற்ருே, நேரங் கிடைக்காமலோ இருக்கும் கழகத் தோழர்களை, சம்பந்தப்பட்ட தாளில் (Form) விவரங்களை எழுதித் தருமாறு உடனிருந்து பெற்று, அவைகளை ரேவினியூ ஆபீசருக்குச் சேர்ப்பிக்கும் பொறுப்பையும் கிளைக் கழக நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுகிருேம்.

மறவாதீர்கள்!

ஆகஸ்ட் 1-ம் நாளுக்குள் திருத்தங்கோரியும், சேர்க்கக்கோரியும் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் அறிவிப்பு.

சென்னை 'அறிவகம்'
25—7—57

தலைமைக் கழகம், (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சட்டசபையில் அண்ணா அறைகூவல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோவில் ஆண்டி' என்பது போன்று நாங்கள் பிரச்சினைகளைப் பற்றி சொல்லுகின்ற நேரத்தில் நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் அதை விட்டுவிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இழந்துவிட்ட தொழிலில் ஒரு வேடிக்கை!

"நான் சில யோசனைகளைச் சொல்லுவதற்கு முன்னால் தொழில் துறை எந்த நிலையில் இருந்தது என்பதற்கு 1945—51-ல், 'Under the post war development scheme—the industries development'-ல் என்னென்ன தொழில்கள் இருந்தன என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1. The Soap Institute and Soap Factory at Calicut;
2. The Oil Factory and Hydrogenation Unit at Calicut;
3. Shark Liver Oil Unit at Calicut;
4. Coir School and Coir Production in Andhra;
5. Oil Institute at Anantapur;
6. Ceramic Factory at Gundur;
7. Bangle manufacturing Unit at Kalahasti;
8. Paper Factory at Rajahmundry;
9. Kollegal Silk Filiature Factory
10. A cottage Industrial& Chemical Testing Laboratory at Madras

" இவைகளில் முக்கியமான பெரும் பகுதியை மொழிவழி மாகாணப் பிரிவினையின் காரணமாக நாம் இழந்திருக்கிறோம். இதில் இருக்கின்ற வேடிக்கை என்னவென்றால், இந்தத் திட்டங்கள் இருந்த காலத்தில் இதற்காக எவ்வளவோ அதிகாரிகள் இருந்தார்கள். இப்போது இதே துறையில் அதிகமாக அதிகாரிகள் இருப்பதாக அறிகிறேன். நான் கூறுவதில் தவறு இருக்குமானால் என்னைத் திருத்த வேண்டிய கடமை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. இந்த விதத்தில் கூடுதலாக அதிகாரிகள் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை—இதில் உண்மையிருக்குமானால்—அதைக் கூறவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.

' இந்த நாடு ஒன்றாக இருந்த காலத்தில் ஒரு டைரக்டரும், ஒரு ஜாயிண்ட் டைரக்டரும் இருந்த அதே இடத்தில் இப்போது, ஒரு டைரக்டரும், ஒரு அடிஷனல் டைரக்டரும், 3 ஜாயிண்ட் டைரக்டரும், அதன்கீழ் பல கெசட்டட் ஆபீசர்களும், 20, 30 எஞ்சினீயர்களும் இருப்பதாக நான் அறிகிறேன். இவ்விதம் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இதில் உண்மையில்லை என்றால் திருத்த வேண்டிய கடமையும் அவர்களுக்கு இருக்கிறது.

தொழில்களை ஏற்றுநடத்த முன்வாரீர்!

"அடுத்ததாக, சிறிய தொழில்கள் அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தத் தொழில்களை சர்க்கார் நேரடியாக நடத்த வேண்டும்; இல்லையானால்—இதில் அதிகமான இலாபம் கிடைக்கிறதாக இருந்தால், தனிப்பட்டவர்கள் இதை நடத்துவதற்கு முன்வருகிறார்களே தவிர, ஏதோ ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்ற தர்ம உணர்ச்சியோடு—அல்லது, நாடு முன்னேற்றம் அடைவதற்காகவோ, பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைவதற்காகவோ தனிப்பட்டவர்கள் எப்பொழுதும் முன்வரமாட்டார்கள். உடனடியாக இலாபம் கிடைப்பதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் தொழிலை ஏற்று நடத்துவதற்கு முன்வருவார்கள். ஆகவே கீழ்க்கண்ட தொழில்களை உடனடியாக சர்க்காரே ஏற்றுநடத்த வேண்டுமென்று ஒரு யோசனை கூற விரும்புகிறேன் :—

1. A paper factory or some factories where bamboo is available.

"நம்முடைய நாட்டில் இன்றைக்கு 600-க்கு மேற்பட்ட பத்திரிகைகள் நடந்து வருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது; இதற்கு வேண்டிய காகிதங்கள் கிடைப்பதற்குக் காகித ஆலைகள் அதிகமாக வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய நாணல்காடு, மூங்கில்காடு நமக்கு வசதியாக இருக்கிற காரணத்தால் இதை உடனடியாக ஆரம்பித்து நடத்த முடியும்.

" அடுத்ததாக,

2. An Oil and Soap Factory in North or South Arcot.
3. A silk filiature factory at Hosur Taluk, Salem district.

" இந்தப் பட்டு விஷயத்தில் இங்கு சபை அங்கத்தினர்களால் உருக்கமாகப் பேசப்பட்டது. பட்டைக்கொண்டு பாவையர்களுடைய மனத்தை திருப்தி செய்வதற்காகவாவது இதை உடனடியாகச் செய்ய முன்வரவேண்டும். நமக்கும்சில நேரங்களில் பட்டு தேவைப்படுகிறது. சில நேரங்களில் பட்டு வாங்குவதில் ஆடவர்களுக்குத் தொல்லைஇல்லாமல் இருக்கும். ஆகவே, பெண்களின் திருப்திக்கு வேண்டியாவது—ஆயிரக் கணக்கான ஆண்டுகாலமாக மேற்கு நாடுகளுக்கு எல்லாம் அனுப்பிக்கொண்டிருந்த இந்தப் பட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக இந்தப் பட்டுத் தொழிலை நடத்துவதற்கு உடனே முயற்சிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்ததாக,

4. A glue and gelatine factory with the huge quantity of tannery flushings available.

" நம்முடைய நாட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. தோலைப் பதனிடும்பொழுது அதிலுள்ள கொழுப்பையும் சத்தையும் வீணாக்காமல் இதை உற்பத்தி செய்யலாம் என்று நிபுணர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

" அடுத்ததாக,

5. Development of coir industry in Tirunelveli and Ramanathapuram districts.
6. Metal industry with improved alloys.

" இதற்காக இன்று எத்தனையோ எஞ்சினீயர்களை வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. எந்தெந்த உலோகங்களிலிருந்து புதிய உலோகம் கிடைக்கும் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக இம்மாதிரியான தொழிற்சாலைகளை உடனடியாக ஏற்படுத்தவேண்டும்.

" அடுத்ததாக,

7. Wood Industry;
8. Pigment manufacturing and paint manufacturing and mixing;
9. Manufacture of musical instruments;
10. Ink manufacture;
11. Boot polish making;
12. Manufacture of parchment-paper;
13. Evolving plastic from meterials like cashew kernals etc.

முந்திரிப் பழமல்ல—முந்திரித் தொழில்!

" சபாநாயகர் அவர்களே! நான் இந்தப் பிரச்சினையிலிருந்து சற்று விலகுவதற்குக் காரணம், இந்த சபையிலே பேசப்பட்ட சிலவற்றிற்குப் பதில் அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது, 'முந்திரிக் காடுகளை வளர்ப்பதற்காக ரூ. 4 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம்' என்று, அவர்களது வசீகரமான புன்னகையை வீசி என்னைப் பார்த்துச் சொன்னார்கள். 'சிந்திரி-முந்திரி என்று பேசியவர்களுக்கு இது திருப்தி அளிக்கலாம்' என்றும் சொன்னார்கள்.

" 'அங்கே தொழில்—இங்கே தொழில்; அங்கே சிந்திரி—இங்கே முந்திரி' என்று நாங்கள் அடுக்குமொழி கூறவில்லை. நாங்கள் அடுக்குமொழி பேசுவதில் நல்ல பயிற்சி பெற்ற பிறகு தான் கூறுகிறோம். அவைகள் ஓரளவிற்கு பயன் அளிக்கத்தக்க வகையில் வருவதையும் நாங்கள் பார்க்கிறோம். முந்திரித்தொழில் என்று நாங்கள் சொல்வது முந்திரிப் பழத்தை அல்ல; அதிலிருந்து—முந்திரிச் செடியிலிருந்து கிடைக்கும் உப பொருள்களை வைத்துக்கொண்டு 'பிளாஸ்டிக்' போன்ற சாமான்கள் செய்து தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று கூறுகிறோமே யொழிய முந்திரிப் பழத்தை நாங்கள் கூறவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சத்திரத்திற்கும் சாவடிக்கும் வித்தியாசம்தான் என்ன?

"ஆகவே, முந்திரி என்று நாங்கள் சொல்வது அதிலிருந்து 'பிளாஸ்டிக்' சாமான்கள் போன்றவைகள் செய்யலாம் என்பதை உள்ளடக்கித்தான் சொல்கிறோமே தவிர, முந்திரிப்பழத்தை நாங்கள் கூறவில்லை.

"முந்திரிப் பழக் காடுகள் நிதியமைச்சரவர்களின் மாவட்டத்தில் மட்டுமல்ல இருப்பது! நான் சிறு வயதில் ஓடி விளையாடிக்கொண்டிருந்த காலத்தில் கைக்கு எட்டிய தூரத்தில் ஆத்தூரில் முந்திரிப்பழம் கிடைத்துக் கொண்டிருந்தது; அவைகளை நான் வேண்டியமட்டில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அம்முந்திரிப்பழங்களை நான் தின்று பழக்கப்பட்டவன்தான். ஆதலால், நிதி அமைச்சரவர்கள் முந்திரிப் பழத்தை வளர்த்துத் தரவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அந்தத் தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது, 'அதற்குச் செலவழிக்க சர்க்காரிடம் பணம் இல்லை' என்று சொல்லக்கூடும். 'நிதி இல்லை என்றால் வரி போடுங்கள்' என்று சொன்னால், காங்கிரஸ் கொறடா அவர்கள் எனக்கே 'வரி கொறடா' கொடுப்பார்கள்—'நாங்கள் வரி போட்டால் நீங்கள் அதை எதிர்ப்பீர்களே'—என்று!

பற்றோ பாசமோ ஏற்படக் கூடாது

" வரிகளைப் போட்டுத்தான் நாட்டை ஆளவேண்டும் என்றால், சர்க்காருக்கும் சத்திரம்-சாவடிகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு சர்க்காருக்குள்ள வருவாய் இரண்டு விதத்தில்தான் இருக்கவேண்டும்; ஒன்று—வரி மூலம்; இரண்டாவது—வருவாய் தரக்கூடிய எல்லா துறைகளையும் சர்க்கார்கைப்பற்றுவதன் மூலம்; 'அவைகள் தனியார் கையில் இருக்கிறதே—தனவந்தர்கள் கையில் இருக்கிறதே' என்ற பற்றோ பாசமோ குறுக்கிடக் கூடாது.

நெருக்கத்தைப் பொறுத்தா கடனும் உதவியும்?

" இன்றையத்தினம், தொழில்களை 'பப்ளிக் செக்டர்' 'பிரைவேட் செக்டர்' என்ற இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள்; 'பிரைவேட் செக்டர்' என்றால்—தனிப்பட்ட முதலாளிகள் பணம் போட்டு தொழில் நடத்துவதாகும்; 'பப்ளிக் செக்டர்' என்றால்—சர்க்காரே பணம் போட்டு நடத்துவதாகும். இதில், 'பிரைவேட் செக்டரு'க்கு நாட்டை ஆளுகிற சர்க்கார் சில நேரங்களில் கடன் கொடுக்கிறார்கள்—உதவியும் அளிக்கிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் இத்தொழிலை நடத்துகிறவர்களுக்கும் உள்ள நெருக்கத்தை பொறுத்துத்தான் கடனும்,உதவியும் அளிக்கப்படுகிறது. ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவெனில், அந்த முறையை மாற்றி நம் நாட்டில் தொழில்கள் 'பப்ளிக் செக்டரி'ல்தான் இருக்கவேண்டும்; அதை இரண்டாகப் பிரித்து ஒன்று—சர்க்காரே முழு மூலதனம் போட்டு நடத்துவது: இரண்டாவது — சர்க்கார் 51 பங்கு போட்டு மற்ற பங்கை பொதுமக்களிடமிருந்து பெற்று நடத்துவது; இதற்குப் பொதுமக்கள் தாராளமாக பணம் தர முன்வருவார்கள். தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழில்களுக்கே அவர்களிடமிருந்து பங்குகள் வாங்க பொது மக்கள் முன்வரும்போது, 'சர்க்காரே தொழிலை நடத்தப் போகிறார்கள்' என்று தெரிவிக்கப்பட்டால், முதலாளிகளிடம் உள்ள நம்பிக்கையைவிட அரசாங்கத்தினிடம் அதிக நம்பிக்கை வைத்துப் பங்குகளை வாங்க பொதுமக்கள் முன்வருவார்கள்.

சிறு சேமிப்புத் திட்டம்—ஒரு யோசனை!

"இன்றுள்ள சிறு சேமிப்புத் திட்டத்தை பாடல் ஆடல் மூலமாகவும், நாடகம் மூலமாகவும், நண்பர்களின் ஒத்துழைப்பு மூலமாகவும், கடைசியாக அதிகாரிகள் மூலமாகவும் நிறைவேற்றலாம் என்று கருதுகிறார்கள்.

"சிறு சேமிப்புத் திட்டத்துடன் நான் சொல்கிற ஒரு சிறியயோசனையையும்அதனுடன் இணைக்கவேண்டும், 'பணத்தைச் சேமித்து வையுங்கள்; 12 ஆண்டில் ரூ. 100 ரூ. 165 ஆகிவிடும்' என்று, கூடையில் மாஞ்செடியை பூமியில் வைத்துவிட்டு, பின்னர் கூடையைத் தூக்கி 'மாஞ்செடி இருக்கிறது பாருங்கள்' என்று சொல்வது மாதிரி விளம்பரம் கொடுப்பதைவிட்டு, அது மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் உபயோகப்படுத்தப்படவேண்டும்.

" அப்பணத்தை, சேலம் அலுமினியம் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளுக்கு 'இயர் மார்க்' செய்து அத்தொழில்கள் வளம்பெறச் செய்வதற்கு, அத்தொழில்களுக்கு இதைப் பங்காக மாற்றினால் இத்திட்டம் விரைவில் வெற்றி அடையும் என்று எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அந்த முறையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

மறைவு

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் தி. ந. சம்பந்தம் அவர்களது தந்தையார் கடந்த 24—/—57 புதன்கிழமை மாலை 3-45 மணியளவில் இயற்கை எய்திய செய்தியறிய மிக வருந்துகிறோம்.

தந்தையை இழந்து வாடும் தோழர் சம்பந்தம் அவர்களுக்கும் அவரது உறவினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

டுனிஷியக் குடியரசு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யரசுத் தலைவராகப் பிரகடனப் படுத்தப்பட்டார்.

சிதி லாமின் என்ற 75 வயதான மன்னரின் 14 ஆண்டுக் கால ஆட்சி இத்துடன் முடிகிறது. இவர் தனது வமிசத்தின் 29-வது மன்னராவார்.

'இவர் மீதோ, இவரது குடும்பத்தார் மீதோ, பழிவாங்கும் நோக்குடன் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது' என்று, ஹபீப் பர்கூபா தெரிவித்திருக்கிறார்.

குடியரசு முடிவை மேற்கொள்ளுமுன், சபையில் ஒவ்வொரு பிரதிநிதியும், மன்னரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

மஜ்ந் மன்ற வளர்ச்சி நிதிக்காக

தூத்துக்குடியில்

'டேல்பின்' தியேட்டரில் 28—7—57 மாலை 5 மணிக்கு கே. வி. இராமன் தலைமையில் **நாகூர் - அனீபா** அவர்கள் தம் குழுவினருடன் இன்னிசை வழங்குவார்.

நெல்லை நகர தி. மு. கழகத் தோழர்களுக்கு :

28—7—57 மாலை 6-மணிக்கு நெல்லை நகர் 13-வதுவட்ட திராவிட முற்போக்கு மன்றத்தின் சார்பில், 'பாப்புலர்' திரையரங்கின் அருகிலுள்ள சந்திரமோகன் நிலையத்தில், நகர தி. மு. கழகத்திற்கு செயலாளராகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களான பி. பத்மநாபன், இலக்குமணன் ஆகியோருக்கு பாராட்டு விழா நடைபெறும்; தோழர்கள் வருகைதர வேண்டப்படுகிறார்கள்.

திருச்சி-புலிவலம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

28—7—57 இரவு 8-மணிக்கு மேற்படி கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் அ. இராமானுசம் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள் விழா

28—7—57 மாலை 6-30 மணிக்கு, வடகோவை தி. மு. கழகச் சார்பில், காந்திபுரம், கிராஸ்கட்ரோடு கழகத்தின் முன்புறத்தில் மேற்படி விழா நடைபெறும்; தோழர் இளம்வழுதி கொடியேற்றி வைப்பார்; தோழர் செழியன், மற்றும் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.